சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன் கொடுமைத் தடுப்பு) சட்டம் - வன் கொடுமைத் தடுப்பு விதிகள், 1995 விதி 16 இன் படி மாநில அளவிலான உயர் நிலை விழிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு அமைத்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (கொடு.தடு1) நலத் துறை

அரசு ஆணை (நிலை)எண்:- 91
நாள்: 3.8.2006

படிக்க:

1. அரசு ஆணை நிலை எண். 41, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 6.3.19962. அரசு ஆணை நிலை எண்.135, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 9.10.19963. அரசு ஆணை (நிலை) எண். 97, அதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 11.12.2001

----

ஆணை:-

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன் கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 ன் கீழ் உருவாக்கப்பட்ட வன் கொடுமைத் தடுப்பு விதிகள், 1995 விதி 16 ன் படி மாநில அளவிலான உயர் நிலை விழிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு அமைக்கப்படவேண்டும். அதனடிப்படையில் முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் மாநில அளவிலான விழிப்பு கண்காணிப்புக்குழு 25 உறுப்பினர்களைக் கொண்டு அமைக்க பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது. பின்னர் பார்வை இரண்டு மற்றும் மூன்றில் படிக்கப்பட்ட அரசாணைகளில் இக்குழு திருத்தியமைக்கப்பட்டது.

2. தற்பொழுது மாநிலத்தில் புதிய அரசு பதவி ஏற்றுள்ளதாலும் பாராளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில் இக்குழு திருத்திமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத்தடுப்பு) விதிகள், 1995 விதி 16-ன் படி இக்குழு கீழ்க்கண்ட 27 உறுப்பினர்களைக் கொண்ட குழுவாக திருத்தி அமைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | முதலமைச்சர் | தலைவர் |
| 2. | நிதி அமைச்சர் | உறுப்பினர் |
| 3. | ஆதிதிராவிடர் நல அமைச்சர் (உள்துறை பொறுப்புகளை முதலமைச்சரே ஏற்றுள்ளதால் தனி அமைச்சர் இல்லை) | உறுப்பினர் |

**மக்களவை உறுப்பினர்கள் (ஆதிதிராவிடர்)**

| | | |
|---|---|---|
| 4. | திரு.அ.கிருஷ்ணசாமி (ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம்) | உறுப்பினர் |
| 5. | திரு.ஏ.கெ.எஸ்.விஜயன் (நாகபட்டினம், நாகப்பட்டினம் மாவட்டம் ) | உறுப்பினர் |

**சட்ட மன்ற உறுப்பினர்கள்(ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்)**

| | | |
|---|---|---|
| 6. | திருமதி.சங்கரவல்லி (எ) சங்கரிநாராயணன் (அச்சரப்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்) | உறுப்பினர் |
| 7. | திரு.அ.சௌந்தரபாண்டியன் (குன்னூர்,நீலகிரி மாவட்டம்) | உறுப்பினர் |
| 8. | திரு.எஸ்.குருசாமி (அந்தியூர், ஈரோடு மாவட்டம்) | உறுப்பினர் |
| 9. | திருமதி.இரா.ராணி (உப்பிலியாபுரம் , திருச்சி மாவட்டம் ) | உறுப்பினர் |
| 10 | திரு.ம.இராஜ்குமார் (பெரம்பலூர், பெரம்பலூர் மாவட்டம்) | உறுப்பினர் |
| 11. | திருமதி.டி.யசோதா (ஸ்ரீபெரும்புதூர்,காஞ்சிபுரம் மாவட்டம் ) | உறுப்பினர் |
| 12. | திரு.போளூர் வரதன் (செங்கம்,திருவண்ணாமலை மாவட்டம்) | உறுப்பினர் |
| 13. | திரு.கோவை தங்கம் (வால்பாறை,கோயம்புத்தூர் மாவட்டம்) | உறுப்பினர் |
| 14. | திரு.இரா.இராம்பிரபு (பரமக்குடி,இராமநாதபுரம் மாவட்டம் | உறுப்பினர் |
| 15. | திரு.டி. மூர்த்தி (திருப்போரூர்,காஞ்சிபுரம் மாவட்டம்) | உறுப்பினர் |
| 16. | திரு.கே.மகேந்திரன் (பெரம்பூர்,சென்னை மாவட்டம்) | உறுப்பினர் |
| 17. | திரு.ப.டில்லி பாபு (அரூர், தருமபுரி மாவட்டம்) | உறுப்பினர் |
| 18. | திரு. கே.உலகநாதன் (திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம்) | உறுப்பினர் |
| 19. | திருமதி பி.பத்மாவதி (நன்னிலம்,நாகப்பட்டினம் மாவட்டம் ) | உறுப்பினர் |
| 20. | திரு.பூவை.ஜெகன்மூர்த்தி (அரக்கோணம்,வேலூர் மாவட்டம் ) | உறுப்பினர் |
| 21. | தலைமைச் செயலாளர் | உறுப்பினர் |
| 22. | உள் துறை செயலாளர் | உறுப்பினர் |
| 23. | காவல் துறை தலைவர், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் | உறுப்பினர் |
| 24. | இயக்குநர்/துணை இயக்குநர்ஆதிதிராவிடர் நல தேசிய ஆணையம் | உறுப்பினர் |
| 25. | செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | அமைப்பாளர் |
| 26. | இயக்குநர் ஆதிதிராவிடர் நல இயக்ககம் | உறுப்பினர் |
| 27. | இயக்குநர், பழங்குடியினர் நல இயக்ககம் சிறப்பு | அழைப்பாளர் |

3. மாநில அளவிலான உயர்நிலை விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் கூட்டம் குறைந்தது ஆண்டுக்கு இரண்டு முறை, சனவரி, சூலை ஆகிய திங்கள்களில் கூட்டப்பட வேண்டும். இக்குழு பின்வரும் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்:-

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன் கொடுமைகள் தடுப்பு) 1989 சட்டம் நடைமுறைப்படுத்தல்
2. வன் கொடுமைக்கு இலக்கானோர்க்குத் தரப்பட்ட தீருதவி, மறுவாழ்வு மற்றும் அவை பற்றிய விவரங்கள்
3. இந்தச்சட்டத்தின் படியான வழக்கு தொகுப்பு
4. இச்சட்டத்தை செயற்படுத்தும் பல்வேறு அலுவர்களின்/ அமைப்புகளின் பங்கு பணி
5. மாநில அரசால் பெறப்படும் பல்வேறு அறிக்கைகள் ஆகியவற்றை ஆய்வு செய்தல்.

/ஆளுநரின் ஆணைப்படி/

பு.ஏ.இராமையா
அரசு செயலாளர்

பெறுநர்

செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் சிறப்புநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை-9.
தலைமைச் செயலாளர், சென்னை-9
செயலாளர், உள்துறை ,சென்னை-9
செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சென்னை-9
உரிய நாடாளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர்கள்
காவல் துறைத்தலைவர், சென்னை-4
காவல் துறை துணைத்தலைவர், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள்,செ-4
இயக்குநர்/துணை இயக்குநர்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல தேசிய ஆணையம், சென்னை-6
இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை-5
இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை, சென்னை-5
செயலாளர், நலத்துறை அமைச்சகம், மைய அரசு, புது டெல்லி
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்

நகல்
பொது (சட்டம் (ம) ஒழுங்கு) துறை, சென்னை-9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (அநமு1) துறை, சென்னை-9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.